

ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (18.8.2024) சென்னை ராஜீவ்காந்தி அரசுத் தலைமை மருத்துவமனைக்குச் சென்று, மறைந்த கடலோர காவல்படையின் தலைமைத் தளபதி ராகேஷ் பால் அவர்களது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு புதுச்சேரி கடல்பகுதியின் தலைமை கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவி குமார் திங்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கல்!

# ரூ.1.25 கோடியில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம்!

## அம்பத்தூரில் அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக. 20- ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு விலையில்லா பொருட்கள் வழங்குதல், 1.25 கோடியில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய மாணவர்களுக்கு விலையில்லா சீருடைகள், பாட புத்தகங்கள்,வரைபடக்கருவிகள் மற்றும் கட்டணமில்லா பேருந்து அட்டை துவக்க நாளன்றே வழங்கி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் பயிற்சியை துவக்கி வைத்தார்.

2024ம் ஆண்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்துள்ள புதிய மாணவர்களுக்கான பயிற்சி துவக்க விழா தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில் நேற்று ( 19.08.2024) காலை 9.30 மணியளவில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அம்பத்தூரில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும். 306 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைக்குத் தேவையான திறன் பெற்ற மனித வளத்தை தொடர்ந்துகிடைக்கச் செய்வதில் தொழிற்பயிற்சி நிலையங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இளைஞர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பிட்டர், எலக்ட்ரீசியன், மோட்டார் வெகிக்கிள் மெக்கானிக், ரெப்ரிஜிரேசன் மற்றும் ஏர்கண்டிஷனிங் மெக்கானிக் போன்ற வேலை வாய்ப்புள்ள தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு, மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், பவர் எலக்ட்ரானிக்ஸ், ஸ்மார்ட் போன் ஆப்பரேட்டர்,பயர் டெக்னாலஜி, அட்வான்ஸ்டு மெஷின் டூல் போன்ற நவீன தொழிற்பிரிவுகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தவிர டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து மேனுபேக்ஸரிங் ப்ராசஸ் கண்ட்ரோல் அண்ட் ஆட்டோமேஷன், இண்டஸ்டிரியல் ரோபோடிக்ஸ் அண்ட் டிஜிட்டல் மேனுபேக்ஸரிங் டெக்னிசியன், அட்வாண்ஸ்டு சிஎன்சி மெஷினிங் டெக்னிசியன், பேசிக் டிசைனர் அண்ட் விருச்சுவல் வெரிபையர், மெக்கானிக் எலக்ட்ரிக் வெகிக்கிள் ஆகிய தொழிற்பிரிவுகளில் சென்ற ஆண்டு முதல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொழிற்பிரிவுகளில் சென்ற ஆண்டில் பயின்ற மாணவர்களில் 80% க்கு அதிகமானோர் பல முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 19.08.2024 அன்று பயிற்சி வகுப்புகள் துவங்கு வதற்காக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அம்பத்தூரில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி பயிற்சி வகுப்புகளை துவக்கி வைத்தார்.

மேலும் புதிய மாணவர்களுக்கு துவக்க நாளன்றே விலையில்லா சீருடைகள், விலையில்லா பாடப்புத்தகங்கள், விலையில்லா வரைப்படக்கருவிகள் மற்றும் கட்டணமில்லா பேருந்து சலுகை அட்டைகள் ஆகியவற்றை அமைச்சர் வழங்கினார். அரசு வழங்கும் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பயன்படுத்தி மாணவர்கள் மிகவும் கவனமாக பயிற்சிபெற்று நல்லவேலை வாய்ப்புகளைப் பெற்று வாழ்வில் வளம் பெறவேண்டும் என்று புதிய மாணவர்களை அமைச்சர் வாழ்த்தினார்.

மேலும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள குறும்படத்தையும் அமைச்சர் வெளியிட்டார். அரசு தொழிற்பயிற்சி நிலையம் அம்பத்தூரில் ஹெச்சிஎல் பவுண்டேசன் சமூக பங்களிப்பு நிதியின் கீழ் ரூ.1.25 கோடியில் மேம்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை செயலாளர் கொ. வீரராகவராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் திருமதி.எ.சுந்தரவல்லி, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# “என் உயிரினும் மேலான” தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் த.மனோ தங்கராஜ் - மேயர் மகேஷ் பரிசு வழங்கினர்!

கன்னியாகுமரி, ஆக. 20- கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் “என் உயிரினும் மேலான..!” என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியானது 18.08.2024, ஞாயிறு அன்று காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், டதி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திரு. வி. அகஸ்தீசன் மற்றும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திரு. தா. ஜெகநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ. ஜவஹர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் மற்றும் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ. என். ரகு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்கள். பேச்சுப் போட்டி நடுவர்களாக தலைமைக் கழகத்திலிருந்து டி. செங்குட்டுவன், பொள்ளாச்சி உமாபதி, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, சூர்யா சேவியர், அமுதரசன், நீரை மகேந்திரன் ஆகியோர் வருகை தந்தனர்.

நிகழ்ச்சியில் மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் என். தில்லைசெல்வம், தணிக்கைக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் என். சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம் Ex.M.L.A., நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி. சுரேஷ், கன்னியாகுமரி மாவட்ட இளைஞர் அணி மற்றும் நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





கன்னியாகுமரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ”என் உயிரினும் மேலான...! என்ற தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு. பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ.என். ரகு ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்கள்.

கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு! “SUCCESS... SUCCESS...”

# ‘பராசக்தி’ படத்தை மேற்கோள் காட்டி வாழ்த்து!

## புரட்சித் தமிழன் சத்யராஜ் வீடியோ பதிவு!

சென்னை, ஆக. 20 - 'பராசக்தி' படத்தின் காட்சியை மேற்கோள்காட்டி, கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா குறித்து புரட்சித் தமிழன் சத்யராஜ் வாழ்த்துத் தெரிவித்து பேசிய வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இந்த நாணயத்தின் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் 'பராசக்தி' படத்தின் காட்சியை மேற்கோள் காட்டி, கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு




விழா குறித்து புரட்சித் தமிழன் சத்யராஜ் பேசி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வசனம் எழுதிய ‘பராசக்தி’ படத்தில் நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் அறிமுக காட்சியில் அவர் ஒரு நாணயத்தை வைத்து கொண்டு SUCCESS.. SUCCESS.. என்று சிரிப்பார்.

இன்றைக்கு அது போல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வைத்துக் கொண்டு தந்தை பெரியாரின் 'சமூகநீதி'க்கு கிடைத்த SUCCESS..

பேரறிஞர் அண்ணாவின் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற கோட்பாட்டிற்கு கிடைத்த SUCCESS..

மானமிகு, மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்குக் கிடைத்த SUCCESS...

'40/40' வென்றெடுத்த தி.மு. கழக தொண்டர்களுக்குக் கிடைத்த SUCCESS... என்று கூறிக் கொண்டே போகலாம். **வாழ்த்துகள், மகிழ்ச்சிகள், பெருமைகள்,**

இவ்வாறு அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.

புரட்சித் தமிழன் சத்யராஜ்



அமைச்சர் பெருமக்கள் - கழக முன்னணியினர் மரியாதை!

# முதல் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## மாவட்டச் செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை, ஆக. 20 - முதல் சுதந்திர போராட்ட வீரர் ஒண்டி வீரன் அவர்களின் 253 வது தினத்தை முன்னிட்டு இன்று (20.08.2024 -செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு நெல்லை நீதிமன்றம் எதிரில் அமைந்துள்ள அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, கழக துணைப் பொதுச் செய



லாளர்கள் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,அந்தியூர் செல்வராஜ் எம்.பி.,நிதி மற்றும் மனித வள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு,வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் அஞ்சலி செலுத்த உள்ளனர் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கழக மாநில,மாவட்ட, மாநகர,ஒன்றிய,பேரூர்,வட்டக் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழகத் தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி.அறிக்கை!

தேனி, ஆக. 20 - தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

16.8.2024 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக்கூட்டம் இன்று (20.8.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணிக்கு தேனி தெய்வா ஹோட்டலில் அவைத்தலைவர் பி.டி..செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய,நகர,பேரூர் கழ



கச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நகர் மன்ற தலைவர்கள்,பேரூர்மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. முப்பெரும் விழா

2. சார்பு அணி நிர்வாகிகள் பணிகள் குறித்து.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





தேனி வடக்கு தெற்கு இளைஞரணி சார்பாக ‘என் உயிரினும் மேலான’ என்னும் தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி தேனி வீரபாண்டியில் நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் சான்றிதழ் வழங்கினர். உடன் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மகாராஜன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மாநில மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்ஆசிப் கான், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், வடக்கு, தெற்கு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.